கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண்.32/2020 வா.சா.1 கனகராஜ்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 01.07.2025

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) கூட்டுறவு சங்கம் பதிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். பதிவு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது வரை பதிவு தொடர்ந்து நடப்பில் இருக்கிறதா என்பது குறித்து ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. கூட்டுறவு சங்கத்தின் தீர்மானத்தின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கலாம் என்று அங்கீகாரம் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. கடந்த 32 வருடமாக தாவா சொத்தில் மாரியம்மாள் மேல்நிலைப்பள்ளி தான் இயங்கி வருகிறது என்றால் சரிதான். மேற்படி பள்ளிக்கு நகராட்சியில் இருந்து குடிநீர் , சொத்து வரி மற்றும் நகராட்சி சார்பாக அனுப்பப்படும் அறிவிப்புகள்அனைத்தும் மாரியம்மாள் பள்ளி நிர்வாகத்திற்குதான் அனுப்பப்படுகிறது என்றால் சரிதான்.

2) அதே போல் நகராட்சியிலிருந்து அனுப்பப்படும் அனைத்து அறிவிப்புகளும் பள்ளி நிர்வாகத்தின் மூலமாகத்தான் எனக்கு தெரியவரும் என்றால் சரிதான்,. மேற்படி பள்ளியில் க.எண். D72, D72/1 ஆகிய இரண்டு கதவு எண்களின் அடிப்படையில் தான் வரி விதிப்பு செய்யப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி இரண்டு கதவு இலக்க எண்களுக்கு தான் பிரதிவாதி தரப்பில் இருந்து சிறப்பு அறிவிப்பு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். அறிவிப்பை பெற்றுக்கொண்ட பள்ளி நிர்வாகம் அந்த அறிவிப்புகளை எனக்கு அனுப்பிவைத்தார்கள் என்றால் சரிதான்.

3) அரசு மற்றும் பிரதிவாதி தரப்பில் இருந்து வரும் அனைத்து அறிவிப்புகளும் பள்ளி

நிர்வாகத்திற்கு வந்து அதன் பின் எனது அலுவலகத்திற்கு வருவதின் அடிப்படையில் எனக்கு தெரியவரும் என்றால் சரியல்ல. குறிப்பாக நகராட்சி அலுவலகத்தில் இருந்து வரும் அறிவிப்புகள் , குறிப்பாணைகள் என்னுடைய அலுவலகத்திற்கு நேரடியாக வரும் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 32 வருடமாக அனுபவத்தில் இருந்து வருவது பள்ளி நிர்வாகம் என்றால் சரிதான். அதனால் தான் 2 சிறப்பு அறிவிப்புகளும் மேற்கண்ட 2 கதவுஎண்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4) பள்ளி நிர்வாகத்திற்கும் , வரி விதிப்புக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்று நான் எழுத்துமூலமாக நகராட்சிக்கு கடிதம் எதுவும் அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அதற்கு பதில் கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் பதில் கொடுக்கவில்லை. பள்ளி நிர்வாகத்திற்கும் , வரி விதிப்புக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்று நான் எழுத்து மூலமாக நகராட்சிக்கு கடிதம் எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. பள்ளி நிர்வாகம் சமூக சேவை அடிப்படையில் இயங்கி வருகிறது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய தாவாவில் பள்ளி நிர்வாகத்தை ஏன் தரப்பினராக சேர்க்கவில்லை என்பதற்கு உரிய விளக்கம் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன்.

5) சிறப்பு அறிவிப்புகள் வந்த சமயத்தில் பள்ளியின் செயலாளராக இருந்தவர் யார் என்றால் ராமசாமி என்ற ஒருவர் இருந்தார். சிறப்பு அறிவிப்புகள் வந்த சமயத்தில் பள்ளியின் தலைமையாசிரியர் அல்லது தலையாசிரியையாக இருந்தவர் யார் என்றால் ஞாபகம் இல்லை. பள்ளி நிர்வாகம் வாடகையின் அடிப்படையில் இயங்கி வருகிறது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) மாணவர்களிடம் இருந்து கட்டணம் வாங்குவதற்கும் கட்டிடத்திற்கு வாடகை வாங்குவதை வைத்து வரி நிர்ணயம் செய்ய முடியாது என்பது எனக்கு தெரியுமா என்றால்

தெரியும். சமூக சேவை செய்து வருவதாக கூறியுள்ள நிலையில் வரி விலக்கு கோரி அரசிடமிருந்து விலக்கு ஏதேனும் பெற்றதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை ஆனால் அரசாணை உள்ளது. சட்டப்படி நான் வரி விலக்கு பெற்றுள்ளேனா என்றால் இல்லை.

7) மாணவர்களிடம் கட்டணம் அதிகமாக வசூல் செய்யும் பள்ளிகளில் எங்கள் பள்ளியும் ஒன்று என்றால் சரியல்ல. பங்களாக்கள் சூழ்ந்த பகுதியில் தான் இந்த பள்ளிஅமைந்துள்ளது என்றால் சரியல்ல., குடிசைகள் சூழ்ந்த பகுதியில் அமைந்துள்ளது. பொள்ளாச்சி பகுதியில் எங்கும் குடிசைப்பகுதிகளே கிடையாது என்றும் நான் மிகைப்படுத்தி சொல்கிறேன் என்றால் சரியல்ல. பள்ளியின் முன் பக்கமாக பொள்ளாச்சி அரசு பேருந்து வருகிறது என்றால் இல்லை. சிற்றுந்து வருவது தெரியுமா என்றால் வரவில்லை. மாக்கினாம்பட்டி பேருந்து எண். 49 செல்லும் விவரம் தெரியுமா என்றால் செல்வதில்லை, அரசால் பிரத்யேகமாக காலை மற்றும் மாலை பள்ளிக்காக அரசு பேருந்து வந்து கொண்டிருக்கிறது என்றால் சரியல்ல.

8) கட்டிடத்தின் தன்மை, அதன் பயன்பாடு அது அமைந்துள்ள பகுதி ஆகியவற்றை பொறுத்து தான் வரி நிர்ணயம் செய்யப்படும் என்றால் சரிதான். மேற்படி அளவீடுகளின் படிதான் நகராட்சி சட்டம் 1920 ன் படி வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வரி நிர்ணயம் செய்யப்படுவதற்கு முன்பு நகராட்சி நகரமைப்பு அலுவலர் மூலமாக அறிவிப்புகள் கொடுக்கப்பட்டன என்றால் சரியல்ல. நகரமைப்பு அலுவலர் மூலம் மேற்படி பள்ளியை ஆசிரியர்கள் முன்பு அளவீடு செய்த விவரம் எனக்கு தெரியும் என்றால் அளவீடு எதுவும் செய்யவில்லை.

9) எங்கள் சங்கத்தினால் கட்டப்பட்டதுதான் மாரியம்மாள் பள்ளி என்றால் சரிதான். எங்கள் சங்கத்தால் கட்டப்பட்ட கட்டிடத்தை வணிக வாடகைக்காக விடப்பட்டது என்றால்

சரிதான். குறைந்த வாடகைக்கு சேவை மனப்பான்மையுடன் அவ்வாறு செய்கிறோம். அவ்வாறு குறைந்த வாடகை பெறுவதற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாடகை ஒப்பந்தம் உள்ளது ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வணிக நோக்கத்துடன் அதிக வாடகை பெறுவதால்தான் மேற்படி வாடகை ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சிறப்பு அறிவிப்பு பள்ளிக்கு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது.

10) மேற்படி சிறப்பு அறிவிப்பு பெற்ற பிறகு குறைந்த வாடகை பெறுவதாக பதில் எதுவும் நாங்கள் நகராட்சிக்கு அனுப்பவில்லை என்றால் சங்கத்தின் பேரில் அறிவிப்பு இல்லாததால் கொடுக்கவில்லை. பள்ளிக்கு அனுப்பப்பட்ட சிறப்பு அறிவிப்புகள் அனைத்தும் சங்கத்தின் பார்வைக்கு வந்தது என்றால் சரிதான். மேற்படி சிறப்பு அறிவிப்புகளுக்கு எதிராக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். சிறப்பு அறிவிப்புகள் பள்ளிக்கு அனுப்பப்படாமல் சங்கத்திற்கே நேரடியாக அனுப்பவேண்டும் என கோரி மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நீதிபேராணை மனு எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

11) 2 சிறப்பு அறிவிப்புகள் அனுப்பப்பட்டுள்ள நிலையில் 2 வழக்காக தொடராமல் ஒரே வழக்காக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். வழக்கு பள்ளிக்கு வழக்கு அறிவிப்புகள் பெற்றதுபோல பொள்ளாச்சியில் வேறு பள்ளிகளும் அறிவிப்பு பெற்றபோது அவை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தை நாடியபோது அவ்வழக்குகள் தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நகராட்சி தொடர்பாக வரி விதிப்பு தொடர்பான அரசு இதழ் வெளியிடுகளை பற்றி எங்கள் சங்கம் தெரிந்திருக்கவேண்டும் என்றால் நகராட்சி பற்றியது என்பதால் எனக்கு தெரியவில்லை.

12) நகராட்சி அனுப்பிய ஒவ்வொரு சிறப்பு அறிவிப்பும் உரிய சட்டத்தின்படி

முறையாகதான் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி சிறப்பு அறிவிப்புகள் சட்டப்படி சரியானது என்பதால்தான் நாங்கள் பள்ளியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. கட்டிட உரிமையாளர் எங்கள் சங்கம் என்பதால் பள்ளியை சேர்க்கவில்லை.

13) நான் வாதி சங்கத்தில் இருந்து எப்போது விடுவிக்கப்பட்டேன் என்றால் கடந்த 31.12.2024 அன்று பணி ஓய்வு பெற்றேன். நான் பணி ஓய்வு பெற்றபிறகும் வாதி சங்கத்திற்கு சார்பாக சாட்சியம் அளிக்கவும், வழக்கு நடத்தவும் அனுமதிவழங்கப்பட்டதாக தீர்மானமோ கடிதமோ நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். ஆனால் எனக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

14) நான் சொல்வதுபோல் வாதி சங்கம் இயங்கவில்லை என்றும், அதனால் எனக்கு தற்போது சாட்சியம் அளிக்க தகுநிலை இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. அனைத்து சிறப்பு அறிவிப்புகளும் உரிய சட்டவிதிகளுக்கு உட்பட்டு முறையாக அனுப்பப்பட்டுள்ளதால் அவை செல்லத்தக்கவை என்றும், அவற்றிற்கு எதிராக தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு தள்ளுபடிகுரியது என்றும் சொன்னால் சரியல்ல.